செய்தி வெளியீடு எண்:462 நாள் : 19.09.2015

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் கீழ் இயங்கும் **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில்** பின்வரும் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படவுள்ளன.

| தொ. எண். | பணியிடத்தின் பெயர் மற்றும் எண்ணிக்கை | சம்பளம் | குறைந்தபட்சக் கல்வித்தகுதி | நியமன முறை |
|---|---|---|---|---|
| 1. | ஆவண எழுத்தர் – ஒரு பணியிடம். | ரூ. 4,800–10,000 + தர ஊதியம் 1,400 | எஸ்.எஸ்.எல்.சி., முடித்திருக்க வேண்டும். | **பொதுப்போட்டி –** முன்னுரிமை அடிப்படையில் |
| 2. | கணிப்பொறியாளர் – ஒரு பணியிடம். | மாதமொன்றுக்கு ரூ.5,000/– தொகுப்பூதியம். | எஸ்.எஸ்.எல்.சி., தேர்ச்சி.<br>தமிழ், ஆங்கிலம் தட்டச்சில் மேல்நிலை தேர்ச்சி மற்றும்<br>DTP சான்றிதழ். | **பொதுப்போட்டி** |

(முன்னுரிமை என்பது கலப்புத் திருமணம்புரிந்தோர், முன்னாள் படை வீரர்கள், மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற விதவை மற்றும் இன்னபிற ஆகும்) 1.7.2015 அன்றுள்ளபடி இதர வகுப்பினர்க்கு 30; அட்டவணை வகுப்பினர்க்கு 35 வயது; பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிறப்படுத்தப்பட்டோர் – சீர் மரபினருக்கு 32 வயது. மேலும், நடைமுறையிலுள்ள தமிழக அரசின் விதிமுறைகளின்படி வயது வரம்பில் தளர்வு செய்யப்படும்.

விருப்பமும் தகுதியும் உள்ளவர்கள் வெள்ளைத் தாளில் கடவுச்சீட்டு அளவிலான புகைப்படத்தினை ஒட்டி, பெயர், முகவரி, பிறந்த நாள், மதம், இனம், கல்வித்தகுதி, முன்னுரிமை கோருவதற்கான சான்று ஆகிய விவரங்களுடன் தேவையான சான்றிதழ்களின் ஒளிப்படிகளையும் சுய சான்றொப்பத்துடன் இணைத்து, வரும் **06–10–2015 பிற்பகல் 5.30 மணிக்குள்** நேரிலோ, பதிவு அஞ்சலிலோ இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு), செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், சி–48, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலக வளாகம், 2–வது நிழற்சாலை, அண்ணா நகர், சென்னை – 600 040 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும், விவரங்களுக்கு

044–26215023 என்னும் தொலைபேசி எண்ணில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்
திட்ட இயக்ககம், சென்னை–600 040.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**